**செய்தி வெளியீடு எண் :2336** **நாள் : 23.12.2022**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2022–2023–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

> "தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் பழங்குடியினர் நல வாரியம் ஆகிய வாரியங்களின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வுதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் சுமார் 3,826 பயனாளிகள் பயன் பெறுவர்"

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரிய உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கி அரசாணை (நிலை) எண்.117, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.6)துறை, நாள்.09.12.2022 –இல் ஆணை வெளியிடப்பட்டது.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.
**ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத் துறை**

***************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in